வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 09.04.2026 வியாழக்கிழமை இதழ் : 93 பக்கங்கள் : 08

## 2025 உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு;

# பல்கலை மாணவர் அனுமதியில் வடக்கு தேசிய ரீதியில் முதலிடம்!

### 9,191 மாணவர்கள் தகுதி பெற்றனர்

கொழும்பு, ஏப். 09

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்ற மாணவர்களின் வீதத்தில் வடக்கு மாகாணம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. கடந்த ஆண்டுகளை விட இம்முறை வடக்கு மாகாணத்தின் கல்விச் சாதனைகள் மிகச் சிறந்த நிலையை எட்டியுள்ளன.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்திலிருந்து தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் (பாடசாலை மாணவர்கள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்) 9,191 மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் அடிப்படையில் 65.19 வீதமாகும். இதன் மூலம் மாகாணங்களுக்கிடையிலான தரவரிசையில் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் பெருமையுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

மேலும், உயிரியல் பிரிவு மற்றும் கலைப் பிரிவுகளிலிருந்து பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் வீதத்தில் தேசிய ரீதியில் முதலிடத்தையும், பௌதீக விஞ்ஞானம் மற்றும் வர்த்தகப் பிரிவுகளிலிருந்து பல்கலைக் கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் வீதத்தில் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தையும் வடக்கு மாகாணம் இம்முறை பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு 07

# உள்நாட்டு வலிமையே எங்கள் நாட்டின் பலம்!

### தொழில்துறையினர் மத்தியில் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 09

உள்நாட்டு தொழிற்துறையினரை வலுப்படுத்துவதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கம் என்றும், அரசாங்கத்திற்குத் தேவையான விநியோகங்களை மேற்கொள்வதில் எதிர்காலத்தில் உள்நாட்டு வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளை விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை ஐக்கிய வியாபாரக் கூட்டமைப்புடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே 07



# எரிபொருள், மின்சார கட்டணங்களை தீர்மானிப்பதற்கு புதிய பொறிமுறை!

கொழும்பு, ஏப். 09

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை சடுதியாக அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டு, உள்நாட்டில் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கான புதிய பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சின் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ இது தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் 07

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 48 மணி நேர பணிப் புறக்கணிப்பு!

### இன்று காலை முதல் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 09

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று காலை 8.00 மணி முதல் 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

படிப்பின் பின்னரான வரையறுக்கப்பட்ட சேவை வைத்தியர்களின் நியமனத்துக்கு எதிர்ப்பு 07

# எரிபொருள், உரம் விலை உயர்வால் பெரும் நெருக்கடியில் விவசாயிகள்!

### சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 09

எரிபொருள், உரம் மற்றும் உபகரணங்களுக்கான அதிகரித்து வரும் செலவுகளை அதிகரிப்பதால் நெருக்கடியை எதிர்கொள்வதால், அரசாங்க மானியங்களை விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். 07

# நீதி அமைச்சர் சபையில் அநாகரீகமான சைகை!

### அஜித் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 09

நீதி அமைச்சர் பாராளுமன்றத்தில் அநாகரீகமான சைகை ஒன்றைச் செய்ததன் மூலம் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 07

# போர்நிறுத்த காலத்தை பயன்படுத்தி எரிபொருள் விலையை குறையுங்கள்!

### சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஏப். 09

போர் நிறுத்த காலத்தை பயன்படுத்தி எரிபொருள் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 07

# ஹோர்முஸ் நீரிணையை தொடர்ந்து மூட ஈரான் முடிவு

தெஹ்ரான், ஏப். 09

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து, பிராந்திய பதற்றம் அபாயகரமாக அதிகரித்துள்ளதால், ஹோர்முஸ் நீரிணையை மறு அறிவிப்பு வரும் வரை மூடுவதாக தெஹ்ரான் அறிவித்துள்ளது.

அதேபோல் லெபனான் மீதான தாக்குதல் நீடித்தால் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகவேண்டிய நிலைமை வரலாமெனவும் ஈரான் அறிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தினுள் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் லெபனானில் 300 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# 3 மாதங்களுக்கு போதுமான அரிசி கையிருப்பில் உண்டு!

கொழும்பு, ஏப். 09

நாட்டில் மூன்று மாதங்களுக்கு தேவையான அரிசி கையிருப்பில் இருப்பதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அரிசி உற்பத்தி தன்னிறைவு பெற்றுள்ளது. அதற்கமைய, மூன்று மாதங்களுக்கு தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது. 07

# வாழ்க்கை செலவு 300 வீத அதிகரிப்பு சம்பள உயர்வு எப்போது கிடைக்கும்?

### பாராளுமன்றத்தில் நாமல் கேள்வி

கொழும்பு, ஏப். 09

நாட்டின் வாழ்க்கைச் செலவு 300 சதவீதத்தினால் அதிகரித்துள்ள நிலையில், அதற்கு ஈடாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எப்போது நடவடிக்கை எடுக்கும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். 07

# வடக்குக்கான ரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 09

வடக்கு ரயில் மார்க்கத்தின் ரயில் போக்குவரத்து சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதையில் ஐந்து ரயில் பாலங்களை மாற்றியமைக்கவும், யானைகள் கடந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட சுரங்கப்பாதையைப் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக, வடக்குக்கான ரயில் சேவைகள் கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அத்தியாவசிய பொருள்களின் விலை பண்டிகைக் காலத்தில் அதிகரிக்காது!

### அமைச்சர் வசந்த சமரசிங்க உறுதி

கொழும்பு, ஏப். 09

பண்டிகை காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு மோதல் நிலைமைகளினால் தேசிய மட்டத்தில் எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மக்கள் நன்கு அறிந்துள்ளபோதிலும், எதிர்க்கட்சிகளே அதனை அறியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.



இந்த நிலையில், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கோதுமை மா உட்பட இனிப்பு உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கப் போவதில்லை என்று உற்பத்தியாளர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை, தொடர் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழில் அரச காணிகள் நீண்டகால குத்தகைக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணத்தில் அரச காணிகளை நீண்ட கால குத்தகைக்கு கோரிய சிலரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றை வழங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதன் போதே சில காணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அரச காணிச் சட்டத்தின் கீழ் நீண்டகால குத்தகையில் காணி வழங்குவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் விரிவாக ஆராயப்பட்டு, சில காணிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டதுடன், ஏனைய காணிகளுக்கான சாத்தியப்பாட்டு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு மாவட்ட செயலரால் அறிவுறுத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக செயலர்கள் (காணி மற்றும் நிர்வாகம்), பிரதேச செயலாளர்கள், மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், மாகாண காணி ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள், நில அளவைகள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் காணிப் பயன் பாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# முல்லைத்தீவு தொட்டியடியில் மஞ்சள் செய்கை அறுவடைவிழா

முல்லைத்தீவு, ஏப். 09

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் குறித்தொதுக்கப்பட்ட நிதியத்தின் கீழ் 2025ஆம் ஆண்டுக்கான மஞ்சள் செய்கை திட்டம் முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவின் தொட்டியடி கிராமத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

விவசாயி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் செய்கை சிறப்பாக விளைச்சல் அளித்ததை முன்னிட்டு, "உலர் வலயத்தில் வெற்றிகரமான மஞ்சள் செய்கை" என்ற தலைப்பில் மஞ்சள் அறுவடை விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விசுவமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவில், விவசாயப் போதனாசிரியர் யோ.அபிஷாயினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் ஆ.லக்சன், பாடவிதான உத்தியோகத்தர்கள் மரக்கறி மற்றும் பழப்பயிர் பிரிவைச் சேர்ந்த க.கேமா,

உப உணவு பயிர்செய்கை பிரிவைச் சேர்ந்த கு.சிவகௌரி, மந்துவில் பிரதேச விவசாயப் போதனாசிரியர் பு.பிரசாந்தன் உள்ளிட்ட அதிகாரிகளும் மேலும் கமக்கார அமைப்பினர் மற்றும் பல முன்னோடி விவசாயிகளும் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 09

இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2026 பெப்ரவரியில் 7,270 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த கையிருப்பு மார்ச்சில் 3.5 வீதத்தால் குறைந்து 7,019 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# 13 ஆம்,14 ஆம் திகதிகளில் மதுபானச்சாலைகள் பூட்டு!

கொழும்பு, ஏப். 09

தமிழ்-சிங்களப் புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு ஏப்ரல் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் காலத்தில் மதுபானம் விற்பனை செய்து கலால் சட்டங்களை மீறும் உரிமதாரர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனை குறித்து 1913 என்ற உதவி எண்ணுக்குத் தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் சட்டவிரோத மதுபான விநியோகத்தில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக, காலி, அனுராதபுரம், கண்டி, குருநாகல் மற்றும் நாடு தழுவிய அளவில் உள்ள சிறப்பு நடவடிக்கைப் பிரிவுகள் உயர் எச்சரிக்கை நிலையில் இருக்கும் என்றும் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# தேசிய அடையாள அட்டை விநியோகத்தில் நெருக்கடி

### அவசரத் தேவைக்கு மட்டும் முன்னுரிமை

கொழும்பு, ஏப். 09

நேற்று முதல் மறு அறிவித்தல் வரை அவசர தேவை உள்ளவர்களுக்கு மாத்திரமே தேசிய அடையாள அட்டையை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் கணினி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கணினி கட்டமைப்பை சீரமைத்து இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தேசிய அடையாள அட்டை விடயங்களைச் சரிபார்த்தல் மற்றும் அரசாங்க, அரசு சாரா நிறுவனங்களுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளிட்ட ஏனைய அனைத்து சேவைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் எம்.எஸ்.பி. சூரியப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் வழக்கமான பொதுச் சேவைகள் மற்றும் ஏனைய அலுவலகப் பணிகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. (அ)

# கொழும்பு ரயில் நிலையத்தின் நவீனமயமாக்கல் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 09

கொழும்பு கோட்டை ரயில் நிலைய நவீனமயமாக்கல் பணிகள் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இன்று காலை 09.00 மணிக்கு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இந்த நவீனமயமாக்கல் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நேற்று திறந்து வைக்கப்பட்ட நவீனமயமாக்கப்பட்ட புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திற்கு இணையாக, ரயில் நிலையத்தையும் மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்க்கட்சித் தலைவரின் எச்சரிக்கை அலட்சியம் செய்துள்ளது அரசாங்கம்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 09

எதிர்க்கட்சித் தலைவரின் எச்சரிக்கையை அரசாங்கம் அலட்சியம் செய்ததாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் நெருக்கடிகள் காரணமாக, நாட்டின் பொதுமக்கள் பெரும் பொருளாதார மற்றும் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாக, தற்போதைய பண்டிகைக் காலத்தில் இந்த நெருக்கடி மக்களின் இயல்பு வாழ்க்கையை வெகுவாகப் பாதித்துள்ளது.

இந்த இக்கட்டான சூழல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தார். சாத்தியமான நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தேவையான தயார்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியிருந்தார். எனினும், அந்த நேரத்தில் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை. தற்போது தற்போதைய சூழலில் எதிர்க்கட்சித் தலைவர் முன்மொழிந்த அதே நடவடிக்கைகளையே அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், அவர்களைப் பாதுகாக்கத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார். இருப்பினும், கள நிலவரம் சவாலானதாகவே தொடர்கிறது. குறிப்பாக, "டித்வா" காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான இழப்பீடுகள் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை.

பாதிப்புகளுக்கு உள்ளாகி நான்கு மாதங்கள் கடந்தும், கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் இன்னமும் தற்காலிக கூடாரங்களிலேயே வசித்து வருகின்றனர். அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் இவர்களுக்கான நிரந்தரத் தீர்வுகள் மற்றும் உரிய இழப்பீடுகளை வழங்குவதில் தாமதம் நிலவி வருவது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோன்று மின் கட்டண அதிகரிப்பு நிலக்கரி மோசடியின் காரணமாகவே இடம்பெற்றுள்ளது. இவ்வாறான மோசடிகளுடன் அரசாங்கத்தால் நீண்டகாலம் பயணிக்க முடியாது- என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.04.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 26

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மனிதகுல விரோதியாக அம்பலப்பட்டு நிற்கும் ட்ரம்ப்

இதுவரையான போர் குறித்து அமெரிக்காவும் ஈரானும் வெவ்வேறு வியாக்கியானங்களைக் கூறிக் கொண்டிருக்கின்ற போதிலும், இரு நாடுகளும் இரு வாரகால போர் நிறுத்தத்துக்கு இணங்கிக் கொண்டிருக்கின்றன. இரு நாடுகளையும் இஸ்லாமாபாத்தில் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதாக பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் “அடங்காக்குதிரை” யான இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு ஈரானுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்துவதற்கான அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்திருக்கின்ற போதிலும், இந்த போர்நிறுத்தம் லெபனானை உள்ளடக்கவில்லை என்று அறிவித்திருக்கிறார்.

ஈரான் மீதான தாக்குதல்களை நிறுத்துகின்ற அதேவேளை, ஹிஸ்புல்லா போன்ற ஈரானிய ஆதரவுத் படைகளுக்கு எதிராக லெபனானுக்குள் இஸ்ரேலியப் படைகள் நடத்திவரும் தாக்குல்கள் நிறுத்தப்படப் போவதில்லை என்பதே அவரின் அறிவிப்பின் அர்த்தம்.

ஈரானுக்கு எதிராக இஸ்ரேலின் துணையுடன் ட்ரம்ப் ஆறு வாரங்களுக்கு முன்னர் போரைத் தொடங்கிய போது அவருக்கு குறிப்பிட்ட சில குறிக்கோள்கள் இருந்தன. ஈரானிய தலைவர்கள் பலரையும் ஆயிரக் கணக்கில் மக்களையும் கொன்று குவித்ததுடன் அந்த நாட்டின் இராணுவ, பொருளாதார கட்டமைப்புக்களையும் எண்ணெய் வளங்களையும் அழித்ததைத் தவிர, அந்த குறிக்கோள்களில் எந்தவொன்றையும் அவரால் சாதிக்க முடியவில்லை என்பதே இன்றைய யதார்த்த நிலை.

ஈரானைப் பற்றிய சரியான கணிப்பீடு இன்றி இஸ்ரேலிய பிரதமரின் தவறான தூண்டுதலில் போரைத் தொடங்கியதை ட்ரம்ப் ஒத்துக்கொள்கிறாரோ இல்லையோ இந்தப் போரில் இருந்து மானத்தை அரை குறையாகவேனும் காப்பாற்றிக்கொண்டு தன்னை எவ்வாறு விடுவித்துக் கொள்வது என்று தடுமாறிக் கொண்டிருந்த அவரைப் பொறுத்தவரை, போர் நிறுத்தத்துக்கு இணங்குவதை தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. ஈரான் போர்நிறுத்தத்துக்காக கெஞ்சிக் கொண்டிருந்தது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கூறுவது “வீழந்தாலும் மீசையில் மண்படவில்லை” என்ற கதை போன்றதே..

ஆறு வாரங்களாக குண்டு வீச்சுக்களை நடத்திய போதிலும், அமெரிக்காவினாலும் இஸ்ரேலினாலும் இதுவரையில் ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

உயர்ந்தளவுக்கு செறிவூட்டப்பட்ட யூரேனிய கையிருப்பை ஈரானுக்கு வெளியே அனுப்பவைப்பதும் அமெரிக்காவின் இன்னொரு குறிக்கோள். அந்த யூரேனியம் இன்னமும் ஈரான் வசமே இருக்கிறது.

ஈரானின் இராணுவக் கட்டமைப்புக்களை குறிப்பாக கடற்படையையும் வியானப் படையையும் நிர்மூலம் செய்து விட்டதாக ட்ரம்ப் அறிவித்த போதிலும், ஈரான் தொடர்ந்து ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை இஸ்ரேல் மீதும் அமெரிக்க ஆதரவு அயல் அரபு நாடுகள் மீதும் நடத்திக் கொண்டேயிருக்கிறது.

நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அமெரிக்கா விதித்த தடைகளுக்கு ஈரானினால் தாக்குப் பிடிக்கக்கூடியதாக இருந்த போதிலும், ஹோர்முஸ் நீரிணையை மூடியதன் மூலம் உலகம் முழுவதையுமே சில நாட்களுக்குள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடிய ஆற்றல் தன்னிடம் இருப்பதை ஈரான் நிரூபித்திருக்கிறது.

தனது குறிக்கோள்களை வளைகுடாவில் சாதிக்க முடியவில்லையே என்ற விரக்தியில் ட்ரம்ப் “ஒரு நாகரிகத்தையே அழிக்கப்போவதாக” வெறித்தனமாகக் கூறியதன் மூலம் மனித குலத்துக்கே விரோதி என்று தன்னைத் தானாகவே அம்பலப்படுத்தி நிற்கிறார் ட்ரம்ப்.

# தொல்பொருள் திணைக்களம் பௌத்தர்களுக்கு மட்டுமானதா?

## சபையில் சாணக்கியன் கேள்வி



கொழும்பு, ஏப். 09

இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் என்பது பௌத்தர்களுக்கு மட்டுமேயான ஒரு நிறுவனம் என்ற பிம்பம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சபையில் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள் ளார்.

பாராளுமன்றில் நேற்று நிலையியற்கட்டளை 27/2 இன் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதன்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் பல முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலப்பரப்புக்குள் ஒரு வாழைமரம் கூட நட தொல்பொருள் திணைக்களம் அனுமதிப்பதில்லை. ஆனால், ஆலயத்துக்கு வெளியே 58 சட்டவிரோத கடைகள் பெரும்பாலும் பெரும்பான்மைச் சமூகத்தினரால் நடத்தப்படுகின்றன. அவற்றுக்குத் திணைக்களம் அனுமதி வழங்குகிறது. ஆலயத்துக்கு ஒரு சட்டம், ஏனையோருக்கு ஒரு சட்டமா? என அவர் கேள்வி எழுப்பினார்.

மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்தில் மின்சார மீற்றர் பெட்டி எரிந்த நிலையில், புதிய பெட்டியைப் பொருத்தத் தொல்பொருள் திணைக்களம் முட்டுக்கட்டை போடுகிறது. ஆலயக் கட்டடத்தைச் சேதப்படுத்தும் அரச மரத்தை அகற்றவும் அனுமதி மறுக்கப்படுகிறது. ஆனால், அதே மாவட்டத்தில் கிரான் பகுதியில் தொல்பொருள் அடையாளங்கள் உள்ள இடத்தில் புதிய விகாரை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரே மாவட்டத்தில் இரண்டு விதமான சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாக அவர் சாடினார்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் 500 இற்கும் குறைவான பெரும்பான்மையின குடும்பங்களே வாழ்கின்றனர். ஆனால், அங்கு புதிதாக 38 பௌத்த விகாரைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது 10 குடும்பங்களுக்கு ஒரு விகாரை என்ற அடிப்படையில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தமிழ் மக்களின் இனப்பரம்பலைச் சிதைக்கும் முயற்சி என அவர் குற்றம் சுமத்தினார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழ் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சிவில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பெரும்பான்மையின கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் அனுமதிக்கப்படுகிறார்கள். அங்கு ஒரு தேங்காய் உடைத்து வழிபடக் கூடத் தடையுள்ளது. அதேபோல் வெடுக்குநாறிமலையிலும் வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுவதாகச் சாணக்கியன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட சட்டவிரோத விகாரையைச் சட்டப்பூர்வமாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் மயிலிட்டி பலாலி பிரதேசத்தில் கத்தோலிக்கத் தேவாலயம் இராணுவத்தால் இடிக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கைக் காட்டுகிறது என்றும் அவர் கூறினார். (அ)

# உயர்தரப் பரீட்சையில் ஆண்களைவிட பெண்களின் தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 09

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பெண்களின் தேர்ச்சி விகிதம் (70.65 வீதம்) ஆண்களின் தேர்ச்சி விகிதத்தை (59.01 வீதம்) விட அதிகமாகக் காணப்படுவதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 58,782 பேர் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

2025ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் உட்பட மொத்தமாக 340,592 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

விண்ணப்பித்தவர்களில் 281,810 (82.74 வீதம்) பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களில் 109,632 பேர் ஆண்களும், 172,178 பேர் பெண்களும் ஆவர்.

தோற்றியவர்களில் மொத்தமாக 176,527 (62.64 வீதம்) பேர் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

பாடசாலை விண்ணப்பதாரர்களில் மொத்தம் 246,571 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், 221,413 (89.80 வீதம்) பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

தோற்றியவர்களில் 146,405 (66.12 வீதம்) பேர் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். இதில் பெண்களின் தேர்ச்சி விகிதம் (70.65 வீதம்) ஆண்களின் தேர்ச்சி விகிதத்தை (59.01 வீதம்) விட அதிகமாகக் காணப்படுகிறது.

மொத்த பாடசாலை விண்ணப்பதாரர்களில் 7,477 (3.38 வீதம்) பேர் மூன்று பாடங்களிலும் “ஏ” சித்தியைப் பெற்றுள்ளனர்.

இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவர்கள்: 33,201 (15.00 வீதம்).

ஒரு பாடத்தில் சித்தியடைந்தவர்கள்: 22,442 (10.14 வீதம்).

அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்கள்: 19,301 (8.72வீதம்).

இதேவேளை, பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றவர்களில் பெண்களே முன்னிலையில் உள்ளனர்.

பாடசாலை விண்ணப்பதாரர்களில் பல்கலைக்கழகத் தகுதி பெற்றவர்களில் 65 வீதம் பேர் பெண்கள், மீதமுள்ள 35 வீதம் பேர் ஆண்கள் ஆவர்.

ஒட்டுமொத்த விண்ணப்பதாரர்களைக் கருதும் போதும் இதேபோன்ற 65 வீதம் (பெண்கள்) மற்றும் 35 வீதம் (ஆண்கள்) என்ற விகிதாசாரமே காணப்படுகிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, 2025 உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பல்கலைக்கழகத் தகுதி பெற்றுள்ளமையும், அதில் பெண்களின் பங்களிப்பு மிக உயர்வாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



ஏப்ரல் - 09 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 26
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சபதமி




**மேடம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறதியால் பிரச்சினை வந்துநீங்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். திருமணப் பேச்சுவார்த்தை கைகூடி வரும். மேலதிகாரி உதவுவார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் தடையின்றி முடிவடையும். நட்பு வட்டம் விரிவடையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். உயர்வு பெறும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
சுறுசுறுப்பாக செயல்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளைமுடிப்பீர்கள். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். மனநிறைவு கிட்டும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். சில சூட்சுமங்களை கற் றுக் கொள்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
வீரியத்தை விட காரியம் பெரிது என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மீனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும் நாள்.

### கேப்பாபிலவு காணி விடுவிப்பு;

## இராணுவத்தினருடன் பேசி விரைவில் முடிவு தருவதாக கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 09

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் துரைராசா ரவிகரன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் கேப்பாப்பிலவு காணி விடுவிப்புத்தொடர்பில், கூடியவிரைவில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, குறித்த கலந்துரையாடலின் பின்னர் கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு தொடர்பான முடிவு தம்மால் அறிவிக்கப்படுமெனவும் பதிலளித்துள்ளார்.

பாராளுமன்ற குழு அறையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்திலேயே இவ் விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்-

கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்பு விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கேப்பாபுலவு காணி விடுவிப்பு விடயத்தில், கடந்த கூட்டத்தில் இராணுவத்தினரிடமிருந்து ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான அநுரகுமார திஸாநாயக்கவால் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இராணுவத்தினரிடமிருந்து முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப் பெறவில்லையெனச் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இராணுவத்திற்கு அந்தக் காணிகள் தேவையென காணி உரிமையார்களிடம் இராணுவத்தால் ஏற்கனவே கோரப்பட்டதா எனவும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த காணிவிடயத்தில், காணி உரிமையாளர்கள் தமக்கு சீரான அறிவித்தல்கள் எதனையும் தமக்குத் தரவில்லை எனவும், அது தொடர்பாக தாம் விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதாக இராணுவத்தினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இவ் விடயத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்கு மாற்றீடாக 44காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தாலும், 11பேருக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படவில்லை என ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கேப்பாப்புலவு மக்களின் பூர்விகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நான் எனது கருத்துக்களை முன் வைத்திருந்தேன்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் இராணுவத்துடன் தாம் கூடியவிரைவில் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## அனலைதீவில் ஆயுங்கள் மீட்பு



யாழ்ப்பாணம், ஏப். 09

அனலைதீவு பகுதியில் துருப்பிடித்த நிலையிலான கைக்குண்டு ஒன்றும், துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனலைதீவு பகுதியிலுள்ள காணி ஒன்றை அந்த காணியின் உரிமையாளர் சுத்தம் செய்துள்ளார். இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் இருந்த கைக்குண்டும், துப்பாக்கியும் அவதானிக்கப்பட்டது. இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற ஊர்காவற்துறை பொலிஸார், நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவற்றை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வணிக மேம்பாடு, பொருளாதார வளர்ச்சிக்கென "வடக்கு மாகாண வணிகக் கொள்கை" உருவாக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 09

வடமாகாணத்தின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்யப் பிரத்தியேகமான "வடக்கு மாகாண வணிகக் கொள்கை" ஒன்றை உருவாக்க முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில் , எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்காகவும் கூட்டத்தின் முடிவில் 3 விசேட உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் வணிக மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட விசேட ஒருங்கிணைப்புக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதன் போதே தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

குறித்த கூட்டமானது வடக்கு மாகாணத்தின் பொருளாதாரச் சுழற்சியை மேம்படுத்துவதற்காக அரச, தனியார், நிதி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கிடையில் வலுவான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதே இந்தக் கூட்டத்தின் பிரதான நோக்கமாக காணப்பட்டது.

குறிப்பாக, சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது மாகாணத்தின் வணிகச் சூழலை ஆரோக்கியமானதாக்குவதற்குத் தடையாக உள்ள பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

மாகாணத்தின் வளங்கள் மற்றும் வணிகங்கள் தொடர்பான தரவுகள் சேகரிப்பு முறையாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலும் இல்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

மாகாணத்தின் பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்யப் பிரத்தியேகமான "வடக்கு மாகாண வணிகக் கொள்கை" ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட சவால்களுக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்காகவும் கூட்டத்தின் முடிவில் 3 விசேட உப குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் மாகாண அரச உயர்மட்ட அதிகாரிகள், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு வடக்கு மாகாணத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (அ)

## செஞ்சிலுவை சங்கத்தினரின் விசேட சிரமதான நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் வடமராட்சி கிழக்கு மனற்காட்டு கடற்கரை பகுதி முழுவதும் விசேட சிரமதான நடவடிக்கை மேற் கொள்ள பட்டது.

இவ் சிரமதானத்தின்போது கடற்கரை பகுதி முழுவதும் உள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தின் கழிவுகள் அகற்றப்பட்டன.

இந்த சிரமதான நடவடிக்கையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாண கிளையினரின் தன்னார்வ தொண்டர்கள் மற்றும் மனற்காட்டு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரண்டு வார காலம் ஈரானுடன் நிறுத்தம்!

## அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு



நியூயோர்க், ஏப். 09

ஈரானுடன் இரண்டு வார காலத்திற்கு போர்நிறுத்தத்தை அறிவிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அவர் சில முக்கிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.

அதன்படி, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகவும், உடனடியாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் திறப்பதற்கு ஈரான் உடன்படவேண்டும் என்பதே பிரதான நிபந்தனையாகும்.

இது இரு தரப்பினருக்கும் பொருந்தும் வகையிலான ஒரு "இருதரப்பு போர்நிறுத்தம்" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் மற்றும் குண்டுவீச்சுகளை இரண்டு வார காலத்திற்கு நிறுத்தி வைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் வலைத்தளத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

"பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் மற்றும் பீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர் ஆகியோருடனான உரையாடல்களின் அடிப்படையில், ஈரானுக்கு எதிராக நேற்று இரவு அனுப்பப்படவிருந்த அழிவு சக்தியை நிறுத்தி வைக்குமாறு அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, ஈரானுக்கு எதிரான குண்டுவீச்சு மற்றும் தாக்குதல்களை இரண்டு வார காலத்திற்கு நிறுத்திவைக்க நான் சம்மதிக்கிறேன்.

ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகவும், உடனடியாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் திறப்பதற்கு ஈரான் குடியரசு உடன்பட வேண்டும் என்பதே இதற்கான நிபந்தனையாகும்.

இது இரு தரப்பினருக்குமான ஒரு போர்நிறுத்தமாக இருக்கும்.

நாம் ஏற்கனவே எமது அனைத்து இராணுவ இலக்குகளையும் எட்டியுள்ளோம்.

அத்துடன், ஈரானுடனான நீண்ட கால அமைதி மற்றும் மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரு உறுதியான உடன்படிக்கையை நோக்கிய பயணத்தில் நாம் வெகுதூரம் வந்துள்ளோம்.

ஈரானிடமிருந்து 10 அம்சங்கள் கொண்ட முன்மொழிவை நாம் பெற்றுள்ளோம், அது பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்குச் சாத்தியமான ஒரு அடிப்படையாக இருக்கும் என நாம் நம்புகிறோம்.

கடந்த காலங்களில் சர்ச்சைக்குரியதாக இருந்த பல விடயங்கள் குறித்து அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு வார கால அவகாசம் அந்த உடன்படிக்கையை இறுதி செய்து பூர்த்தி செய்ய உதவும்.

அமெரிக்காவின் ஜனாதிபதி என்ற ரீதியிலும், மத்திய கிழக்கு நாடுகளின் பிரதிநிதியாகவும், இந்த நீண்ட காலப் பிரச்னை தீர்வை நோக்கி நகர்வதை நான் கௌரவமாகக் கருதுகிறேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஹோர்முஸ் நீரிணை ஊடான கடல்வழிப் போக்குவரத்திற்கு இரண்டு வார காலத்திற்கு பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதாக ஈரான் தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளுக்கு இந்த இடைநிறுத்தம் பயன்படுத்தப்படும் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

(அ)

# சத்திர சிகிச்சைகளுக்காக காத்திருக்கும் 2712 சிறுவர்!



கொழும்பு, ஏப். 09

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பல்வேறு வகையான சத்திர சிகிச்சைகளுக்காக இரண்டாயிரத்து 712 சிறுவர்கள் தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ளதாகச் சுகாதார பிரதி அமைச்சர் கலாநிதி ஹன்சக விஜேமுனி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜயரத்ன எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், அதிகபட்சமாக ஆயிரத்து 25 சிறுவர்கள் இதய சத்திர சிகிச்சைக்காகக் காத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் பொதுச் சிறுவர் சத்திர சிகிச்சைக்காக 593 பேரும், கண் சிகிச்சைக்காக 388 பேரும், காது, மூக்கு, தொண்டை சிகிச்சைகளுக்காக 266 பேரும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

கடந்த 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் இந்த வைத்தியசாலையில் 18 ஆயிரத்து 600 சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சைகளைத் துரிதப்படுத்தும் நோக்கில், எலும்பு முறிவு, பிளாஸ்ரிக் மற்றும் தண்டுவடம் தொடர்பான புதிய சத்திரசிகிச்சை பிரிவு 2022 முதல் இயங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படவுள்ள புதிய கட்டடத் தொகுதி மூலம் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, வாராந்தம் மேற்கொள்ளப்படும் இதய சத்திரசிகிச்சைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

(அ)

# 'இலங்கை-சீன உறவுகள்' நினைவு நூல் வெளியீடு

கொழும்பு, ஏப். 09

இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகளைக் கொண்டாடும் வகையில், "இலங்கை - சீனா உறவுகள் பகிரப்பட்ட எதிர்காலத்தைக் கொண்ட சமூகம்" எனும் தலைப்பிலான நினைவு நூல் கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தினால் கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், இரு நாடுகளையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

புகழ்பெற்ற இராஜதந்திரி கலாநிதி ஆனந்த குமாரசிறியினால் எழுதப்பட்ட இந்த நூல், இலங்கையின் வளமான வரலாறு, நாகரிகம் மற்றும் கலாசார விழுமியங்களுடன் சீனாவுடனான நட்புறவின் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்தியுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய தூதுவர் மகிந்த ஜயசிங்க, 1957 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு, தற்போது பல மடங்கு வளர்ந்துள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், சீனாவின் அபரிமிதமான தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் முன்னேற்றங்களை இலங்கையின் எரிசக்தி மற்றும் ஏற்றுமதித் துறைகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது குறித்து நூலாசிரியர் கலாநிதி ஆனந்த குமாரசிறி தனது உரையில் விரிவாக விளக்கமளித்தார்.

(அ)

# 966 பேர் கைது!

கொழும்பு, ஏப். 09

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டிற்கமைய, போதைப்பொருள் சுற்றிவளைப்பின்போது 966 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 975 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கைது செய்யப்பட்ட 11 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர் என அடையாளம் காணப்பட்டுள்ள ஒருவர் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டு. போதனா வைத்தியசாலையில் கதிர்வீச்சுச் சிகிச்சைகள் ஸ்தம்பிப்பு!

## புற்றுநோயாளர்கள் பெரும் அவதி

மட்டக்களப்பு, ஏப். 09

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் 'லீனியர் இயந்திரம் செயலிழந்துள்ளதால், கடந்த மார்ச் 31ஆம் திகதி முதல் கதிர்வீச்சு சிகிச்சை சேவைகள் முடங்கியுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

இயந்திர செயலிழப்புத் தொடர்பில் ஊடகங்கக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புற்நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் லீனியர் அக்சிலேட்டர் இயந்திரம் கடந்த மாதம் முதல் செயலிழந்துள்ளது. இந்நிலையில் சிகிச்சைக்காக வருகைத்தரும் நோயாளர்கள் அவதியுற்று வருகின்றனர்.

குறித்த இயந்திரம் பழுதடைவதற்கு முன்னர், நாளொன்றுக்கு சுமார் 60 நோயாளர்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது இயந்திரம் செயலிழந்துள்ளமையால், அந்த நோயாளர்களின் தொடர் சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் மாத்திரமல்லாது மாத்தறை, அம்பாந்தோட்டை, பதுளை, அம்பாறை, திருகோணமலை, பொலனறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளிலிருந்து கதிர்வீச்சு சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்படும் நோயாளர்களும் இங்கு சிகிச்சையை பெறுகின்றனர்.

இந்நிலையில் வைத்தியசாலைக்கு நீண்ட தூரத்திலிருந்து வருகை தரும் நோயாளர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தற்போது இலங்கையில் உள்ள நவீன புற்றுநோய் சிகிச்சை முறைகளில் இந்த 'லீனியர் அக்சிலரேட்டர்' கதிர்வீச்சு சிகிச்சை மிக முக்கியமானது.

இவ்வாறான இயந்திரங்கள் மஹரக புற்றுநோய் வைத்தியசாலை, கண்டி மற்றும் காலி தேசிய வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் மாத்திரமே தற்போது பயன்பாட்டில் உள்ளன.

குறித்த இயந்திரத்திற்கான பராமரிப்பு சேவைகளை வழங்கி வந்த நிறுவனம், அச்சேவையிலிருந்து விலகியுள்ளமையால் இயந்திரத்தை மீளச் சீரமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இக்கட்டான இந்த நிலைமை குறித்து சுகாதார அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை எவ்வித தீர்வும் வழங்கப்படவில்லை-என்றார். (அ)

# திருக்கோவில் பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக கேந்திரமூர்த்தி

அம்பாறை, ஏப். 09

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக, கல்முனை ஆதார வைத்தியசாலையின் கணக்காளராக கடமையாற்றிய எம்.கேந்திரமூர்த்தி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ரெட்னம் சுவாகர், பிரதேச செயலகத்தின்உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உசாந்த்,சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.அரசரெத்தினம், மேலதிக மாவட்ட பதிவாளர் எம்.பிரதீப், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தென்கிழக்குப் பல்கலை ஊழியர் சங்க 25ஆம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகள்



அம்பாறை, ஏப். 09

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழாவும், பொதுக்கூட்டமும் நேற்று முன் தினம் தொழில்நுட்பவியல் பீட மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சங்கத் தலைவர் சி.எம். அஹமத் முனாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊழியர்கள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வு மறைந்த ஊழியர்களை நினைவுகூரும் மௌன அஞ்சலியுடன் தொடங்கியதுடன், துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. பொதுச் செயலாளர் எம்.எம். முகமது காமில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் நீண்டகால சேவையாற்றிய ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், சங்கத்தின் வளர்ச்சி, சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்கள் குறித்து உரைகள் இடம்பெற்றன. உறுப்பினர் பங்கேற்பு குறைவாக இருப்பது குறித்து கவலை வெளியிடப்பட்டதுடன், ஒற்றுமையின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் புதிய நிர்வாக குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன் அடிப்படையில் சி.எம். அஹமத் முனாஸ் மீண்டும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். எம்.எம். முகமது காமில் பொதுச் செயலாளராகவும், கே.எல். இப்ராஹிம் உப தலைவராகவும் தெரிவாகினர். மேலும், துணை செயலாளர்கள், பொருளாளர், நலன்புரி செயலாளர்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 27 பேர் கொண்ட புதிய குழு அமைக்கப்பட்டது. (அ)

# சம்மாந்துறையில் 50 பேருக்கு காணி உரிமம் வழங்கி வைப்பு!



அம்பாறை, ஏப். 09

அம்பாறை மாவட்ட புதிய அரசாங்க அதிபர் அனுபமா மங்கள விக்ரமாராச்சி நேற்று முன் தினம் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு தனது கன்னி விஜயத்தை மேற்கொண்டார்.

இவ் விஜயத்தின் முக்கிய அம்சமாக, நீண்ட காலமாக காணி உரிமைக்காகக் காத்திருந்த சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கு காணி அனுமதிப் பத்திரங்களை அரசாங்க அதிபர் வழங்கி வைத்தார்.

அத்துடன் சமூக நலன்புரித் திட்டங்களின் கீழ், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வித் தரத்தை ஊக்குவிக்கும் வகையிலான விசேட கல்விப் உதவிக்கான காசோலைகளும் இதன்போது கையளிக்கப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபராகப் பதவியேற்றதன் பின்னர் சம்மாந்துறைப் பகுதிக்கு அவர் மேற்கொண்ட முதல் உத்தியோகபூர்வ பயணம் இதுவாகும்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த விசேட வரவேற்பு மற்றும் நலத்திட்ட நிகழ்வில், அரசாங்க அதிபர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது அரசாங்க அதிபரைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில், பிரதேச செயலாளரினால் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. (அ)

# அம்பாறையில் அதிக உஷ்ணம்!

அம்பாறை, ஏப். 09

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் அதிக உஷ்ணம் மற்றும் கொளுத்தும் வெயில் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது விவசாய நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

புத்தாண்டு வியாபாரமும் மந்த கதியில் நகருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் அதிக வெப்பநிலை காரணமாக பொதுமக்கள் கால்நடையாக அல்லது சைக்கிள்களில் செல்வதை தவிர்த்து வாகனங்களில் பயணிப்பதை காண முடிகின்றது .

இதேவேளை விவசாய நடவடிக்கைகளின் போது பயன் தரும் மா மரம் மற்றும் வெற்றிலை செய்கை, இலைக்கறி வகைகள் போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கால்நடைகளுக்கு வேண்டிய புற் தரைகளும் தற்போது கருகி வருகின்றன.

இதேவேளை பொதுமக்கள் நீர்நிலைகளையும் மற்றும் நிழல் பகுதிகளையும் அதிகம் நாடி வருகிறார்கள்.

வீதியோரத்தில் இளநீர், சர்பத், பழ வியாபாரம் களைகட்டி வருகிறது. விலைகளும் எகிறி வருகின்றன.

தொடர்ச்சியான வெப்பநிலை காரணமாக சிறியவர்கள் வயோதிபர்கள் பல வித நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். (அ)

# "ஈரான் போரை நிறுத்து" கண்டியில் போராட்டம்!



கொழும்பு, ஏப். 09

சோலிச சமத்துவக் கட்சியின் சமூக சமத்துவத்திற்கான அனைத்துலக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அமைப்பினால் கண்டியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் கண்டி, பேராதனை, கலஹா சந்தியில் நேற்று முன் தினம் 12.00 மணி முதல் 1.00 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலியப் போரை நிறுத்து, ஐஎம்எப் சிக்கன வெட்டுகள் வேண்டாம், கல்விக்கும் சுகாதாரத்திற்கும் நிதி ஒதுக்கு, பல்கலைக்கழகங்களில் பேச்சு மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரத்தைப் பாதுகாத்திடு, சோலிச அனைத்துலக வாத போர் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்பு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

# "அஷ்ரப் எனும் இலக்கியம்" ஆய்வு நூல் வெளியீட்டு விழா

அம்பாறை, ஏப். 09

இலக்கிய விமர்சகரும், சிரேஷ்ட ஊடகவியலாளரும் வருகைதரு விரிவுரையாளருமான ஜெஸ்மி எம்.மூஸா எழுதிய "அஷ்ரஃப் எனும் இலக்கியம்" ஆய்வு நூல் வெளியீட்டு விழா மருதமுனை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு நடைபெறவுள்ளது

கலாபூஷணம் மர்ஹூம் ஏ.எல்.எம்.சலீம் அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு தென்கிழக்குப்பல்கலைக்கழக மொழித்துறையின் தவிசு பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தலைமை தாங்கவுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடாதிபதி எம்.எம்.பாஸில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ள இந்நிகழ்வின் வெளியீட்டுப் பிரதியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை அமைப்பாளர் எம்.எச்.எம்.தாஜூதீன் (சறோ) பெற்றுக் கொள்ளவுள்ளார்.

விழாவின் தொடக்கவுரையினை கல்முனை வலயக் கல்வி அலுவலக தமிழ் மொழிக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் நிகழ்த்தவுள்ளதுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் நூல் ஆய்வுரையினை நிகழ்த்துவார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உள்நாட்டு வலிமையே...

ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு போர்ச் சூழல் காரணமாக உள்நாட்டுத் தொழில்துறை எதிர்நோக்கியுள்ள சவால்கள் மற்றும் தொழில்துறையினர் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும், அவற்றுக்கு வழங்கக்கூடிய சாதகமான தீர்வுகள் குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப் பட்டன.

செஸ் வரி, உள்நாட்டுத் தொழில்துறையில் நிலவும் மனிதவளப் பற்றாக்குறை மற்றும் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் பொருள்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

தரம் குறைந்த பொருட்கள் உள்நாட்டுச் சந்தைக்கு வருதல் மற்றும் அது சார்ந்து எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது தொடர்ந்தும் ஆராயப்பட்டது.

கொள்கலன்களை விடுவித்தல் மற்றும் அதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் அரச அதிகாரிகள், இலங்கை ஐக்கிய வியாபாரக் கூட்டமைப்பின் தலைவி டானியா எஸ். அபேசுந்தர உட்பட அதன் உறுப்பினர்கள் சிலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ)

## பல்கலை மாணவர்...

நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத் தகுதியைப் பெற்றவர்களின் வீதத்தில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த வடக்கு மாகாணம், இம்முறை தனது அடைவுமட்டத்தை மேலும் உயர்த்தி முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. அதேவேளை, பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக, இம்முறை மாகாண ரீதியாக 534 மாணவர்கள் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்தியான "ஏ" (3ஏ) பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். இது தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளில் 3.79 வீதமாகும். 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களின் வீதத்தின் அடிப்படையிலான தரவரிசையிலும் வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பிடித்து மேலும் ஒரு சாதனையைத் தனதாக்கியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் இத்தகைய கல்வி வளர்ச்சிக்கும் இணையற்ற சாதனைக்கும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து மாணவர்களுக்கும், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும், மாகாண நிர்வாகக் கட்டமைப்புக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தமது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

(அ)

## எரிபொருள், மின்சார...

போர்ச் சூழல் காரணமாக உலகச் சந்தையில் எரிபொருள் விலை தற்போது 20 வீதம் முதல் 35 வீதம் வரை அதிகரித்துள்ளது. இத்தகைய பாரிய மற்றும் கட்டுப்பாடற்ற விலை உயர்வுகளை முந்தைய முறையின் கீழ் கையாள்வது நடைமுறைச் சாத்தியமற்றது என பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச சந்தையின் யதார்த்தங்களை உள்நாட்டு பொருளாதார நிலைமைகளுடன் இணைக்கும் வகையில் இந்தப் புதிய முறைமை அமையும்.

புதிய விலை நிர்ணய முறையினால் குறைந்த வருமானம் பெறுபவர்கள் பாதிக்கப்படுவதை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க விசேட கவனம் செலுத்தப்படும்.

உலகளாவிய விலை மாற்றங்களுக்கு ஏற்ப உள்நாட்டு மின்சாரம் மற்றும் எரிபொருள் கட்டணங்களைச் சீரமைக்க முறையான கட்டமைப்பு உருவாக்கப்படும்.

முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிய விலை நிர்ணய பொறிமுறை குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக இது முன்னெடுக்கப்படவுள்ளது.

# மத்திய கிழக்கு போர் நிறுத்தத்தை வரவேற்கும் ஐ.நா. பொதுச் செயலர்!

நியூயோர்க், ஏப். 09

அமெரிக்காவும் ஈரானும் அறிவித்த இரண்டு வார கால போர் நிறுத்தத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரஸ் வரவேற்றுள்ளார்.

மத்திய கிழக்கில் மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் சர்வதேச சட்டத்தின் கீழ் தங்களுக்குள்ள கடமைகளுக்கு இணங்கவும் போர் நிறுத்தத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படவும் குட்டெரஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ந்து நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் பொதுமக்களின் உயிர்களைப் பாதுபாப்பதற்கும் துன்பங்களைத் தணிப்பதற்கும் போர் நிறுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவது மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை எளிதாக்கிய பாகிஸ்தான் மற்றும் மத்தியஸ்தம் வகிக்கும் பிற நாடுகளின் முயற்சிகளுக்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

(அ)



உலகச் சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களைக் குறைப்பதே அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையின் பிரதான இலக்காகும் - என்றார். (அ)

## அரச மருத்துவ...

தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

## எரிபொருள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியத் துறைகளைப் பாதிக்கும் ஒரு பன்முக தேசிய நெருக்கடியை நாம் எதிர்கொள்கின்றோம்.

அதிகரித்து வரும் பயன்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் எரிபொருள் விலைகள், குறைந்த வருமானம் என்பன நடுத்தர வர்க்கக் குடும்பங்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது இதனையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் உள்ள வலுவான கல்விச் சாதனைகளைக் கொண்டாடும் அதே வேளையில், இந்தப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாகக் கல்வி செயற்பாடுகள் தொடர்ந்து அழுத்தத்தில் உள்ளன.

உலகளாவிய மோதல் மற்றும் உள்நாட்டு உறுதியற்ற தன்மையின் தாக்கங்களிலிருந்து நாட்டின் விவசாய உற்பத்தித்திறனையும் சமூக நலனையும் பாதுகாக்க, திறமையான அரசாங்க நிர்வாகத்தையும் மூலோபாயத் தலையீடும் அவசியம்-என்றார். (அ)

## நீதி அமைச்சர்...

நீதி அமைச்சர் பாராளுமன்றத்தில் அநாகரீகமான சைகை ஒன்றை செய்ததன் மூலம் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பகையினால் பகை தீராது என்று தர்ம போதனை குறிப்பிடுகிறது. மன்னிப்பது தெய்வீகப் பண்பாகும். இந்த விவகாரத்தை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வதன் மூலம் அமைச்சருக்கு தனிப்பட்ட ரீதியில் பாதிப்பு ஏற்படலாம். எனவே அவருக்கு மன்னிப்பு வழங்குகிறேன். அவர் மீது அன்பு பாராட்டுவதோடு இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர விரும்புகிறேன் -என்றார். (அ)

## போர்நிறுத்த காலத்தை...

மத்திய கிழக்கில் நிலவும் தற்காலிக போர் நிறுத்தச் சூழலைப் பயன்படுத்தி, நாட்டின் அத்தியாவசிய விநியோகச் சங்கிலியை வலுப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் .

தற்போது ஏற்பட்டுள்ள இரண்டு வார கால போர் நிறுத்த இடைவெளியை ஒரு வாய்ப்பாகக் கருதி, நாட்டிற்குத் தேவையான

எரிபொருள் மற்றும் எரிவாயு, விவசாயத்திற்கான உரங்கள் , மருந்துப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உர விநியோகம் தொடர்பாக ஜனாதிபதி ஒரு நிலைப்பாட்டைக் கூறினாலும், கள யதார்த்தம் வேறாக உள்ளது. மத்திய கிழக்கு பதற்றத்தைக் காரணம் காட்டி உயர்த்தப்பட்ட எரிபொருள் விலையை, தற்போதுள்ள உலகளாவிய விலை வீழ்ச்சிக்கு ஏற்ப குறைக்க வேண்டும். எனவே, இன்று நள்ளிரவோ அல்லது நாளைய தினமோ எரிபொருள் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்-என்றார். (அ)

## வாழ்க்கை செலவு...

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலுக்கு முன்னர் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒருமுறை சம்பளம் உயர்த்தப்படும் என தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. அது தற்போது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது? எரிபொருள், மின்சாரம் மற்றும் எரிவாயு விலை உயர்வால் வாழ்க்கைச் செலவு 300 வீதம் அதிகரித்துள்ளது. இதற்கு ஈடாக சம்பளம் உயரும் வரை மக்கள் காத்திருக்கிறார்கள்.

அரச துறையில் மட்டுமன்றி, தனியார் துறையிலும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும்.

முன்னர் நிலக்கரியில் பிரச்னை இல்லை என்று கூறப்பட்டது, இப்போது பிரச்னை இருப்பதாகக் கூறப்படுகிறது. கணக்காய்வு அறிக்கையின்படி, இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி நிறுவனம் பதிவு செய்யப்படவில்லை. அத்துடன் அதன் தரத்தை பரிசோதித்த ஆய்வக அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலக்கரி ஊழலானது நாட்டின் எரிபொருள் மற்றும் மின்சார விலைகள் அதிகரிக்கப்படுவதற்கு நேரடியாகப் பலம் சேர்த்துள்ளது.

இவ்வாறான பொய்கள் மற்றும் ஊழல்கள் மூலம் மக்களை ஏமாற்றாமல், அதிகரித்துள்ள சுமைக்கு ஏற்ப மக்களுக்குத் தீர்வினை வழங்க வேண்டும்-என்றார். (அ)

## 3 மாதங்களுக்கு...

குறிப்பாக, நாளொன்றுக்கு 6 ஆயிரத்து 500 முதல் 7 ஆயிரம் வரையான மெற்றிக் தொன் அரிசியே மக்களின் நுகர்வுக்கு தேவையாகவுள்ளது.

அதன்படி, மாதத்துக்கு எமக்கு 2 இலட்சத்து 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியே தேவையாகவுள்ளது. ஆனால், தற்போது நாட்டில் 30 இலட்சத்துக்கு அதிக மெற்றிக் தொன் அரிசி கையிருப்பில் உள்ளது.

எனினும், கீரி சம்பா மற்றும் சம்பா போன்ற அரிசிகளுக்கு சிறிய தட்டுபாடு காணப்படுகிறது.

டித்வா சூறாவளியினால் கீரி சம்பா உள்ளிட்ட விளைச்சல் பாதிக்கப்பட்டதுடன், அதனை மீண்டும் பயிரிட முடியாதமையால் இந்த நிலைமை ஏற்பட்டது.

இதனால், தற்போது கீரி சம்பா, பால் பொன்னி போன்ற அரிசி வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.அதற்கமைய, இன்று முதல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி சந்தைக்கு விடுவிக்கப்படும்-என்றார்.

(அ)

## வடக்குக்கான ரயில்...

இந்த நிலையில், தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, ரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான ஆசன முன்பதிவுகள் கடந்த 4ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், பயணிகள் ஆர்வத்துடன் தமக்கான பதிவுகளை மேற்கொள்வதை காணமுடிகின்றது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்படும்!

## உறுதிபடக் கூறினார் ஜனாதிபதி



கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிக்கும்போதும், மூடப்பட்டுள்ள வீதிப் பகுதிகளைத் திறக்கும்போதும் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய சாதகமான தீர்வுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

கொழும்பு, ஏப். 09

வடக்கில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள தனியார் காணிகளையும், முறையாக விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்திலேயே அவர் இதனை அறிவித்துள்ளார்.

அதன்படி, மத வழிபாட்டுத் தலங்களுக்குரிய காணிகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது கேட்டறிந்துள்ளார்.

2025 ஆம் ஆண்டில் மாத்திரம் வடக்கில் சுமார் 1000 ஏக்கர் தனியார் காணிகளை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது டன், ஏனைய காணிகளையும் முறையாக விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் இயல்பு வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வகையில் காணிகளை விடுவிக்கும் அதேவேளை, கைத்தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்காக தற்போதுள்ள காணிகளை முகாமைத்துவம் செய்து கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு மற்றும்

# முல்லைத்தீவில் இராணுவத்தின் வசமுள்ள தபால் நிலைய காணி ஜூனில் விடுவிப்பு!

கொழும்பு, ஏப். 09

முல்லைத்தீவு தபால் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை வரும் ஜூன் மாதத்திற்குள் விடுவிக்க இராணுவம் உறுதியளித்துள்ளதாக வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கௌஷல்யா ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

முல்லைத்தீவு தபால் நிலையம் தற்போது ஒரு தனியார் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருவதாக அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

குறித்த தபால் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட காணியில் தற்போது இராணுவத்தின் 23 ஆவது படைப்பிரிவு நிலை கொண்டுள்ள நிலையில், அதனை 2026 ஜூன் மாதத்திற்குள் விடுவிப்பதாக இராணுவம் வாய்மொழி மூலமான உறுதியை வழங்கியுள்ளது.

இந்தக் காணியை முறையாக தபால் திணைக்களத்திடம் கையகப்படுத்தும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காணி விடுவிக்கப்பட்ட பின்னர், 2027-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிய தபால் நிலையக் கட்டடத்தை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# அமைச்சருக்கு எதிரான பிரேரணை தப்பிக்க முயற்சிக்கிறார் ஜனாதிபதி

## முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 09

மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர்ச் சூழலால் எரிபொருள் மற்றும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ள நிலையில், அது குறித்து பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரை மக்களை ஏமாற்றும் வெறும் கண்துடைப்பு மாத்திரமே. அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையிலிருந்து தப்பிக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

நுகேகொடையில் அமைந்துள்ள முன்னிலை சோசலிசக் கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா முன்னெடுத்துள்ள தாக்குதல்களால் உலகளாவிய ரீதியில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் உயர்ந்துள்ளன. இது இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் ஒரு பாரிய நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றது.

யூரியா உரம் தொடர்பில் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்கள் முற்றிலும் தவறானவை. உர நிறுவனங்களிடம் இருந்த உரத் தொகையை முழுமையாக அரசாங்கத்திடம் ஒப்படைக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் ஜனாதிபதி தலையிட்டு அந்த நிறுவனங்களுக்கு சார்பாக முடிவுகளை மாற்றியுள்ளார்.

அதேபோல் தரமற்ற நிலக்கரி இறக்குமதி காரணமாக மின் உற்பத்தியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணம் தொடர்பிலும் அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருகின்றது. சாதாரண மக்களின் சூரிய சக்திக் கட்டமைப்புகளை முடக்கிவிட்டு பெரும் நிறுவனங்களுக்கு காடுகளையும் யானைகள் பாதுகாப்பு வலயங்களையும் அழித்து சூரியப் பலகைகளை அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கி வருகின்றது-என்றார். (அ)

# 2025 உயர்தரப் பரீட்சை முடிவுகள் மேல், வட மாகாணங்கள் சாதனை

கொழும்பு, ஏப். 09

2025ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை விண்ணப்பதாரர்களில் மேல் மாகாணமும், ஒட்டுமொத்த விண்ணப்பதாரர்களில் வட மாகாணமும் பல்கலைக்கழகத் தகுதியின் அடிப்படையில் முன்னிலையில் பெற்றுள்ளன.

2025ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றவர்களின் சதவீத அடிப்படையில், பல்கலைக்கழகத் தகுதி பெற்றவர்களில் மேல் மாகாணம் (69.43 வீதம்) முதலிடத்தில் உள்ளது. இங்கு பரீட்சைக்குத் தோற்றிய 53,275 மாணவர்களில் 36,987 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

வடமேல் மாகாணம் (68.48 வீதம்) மற்றும் வட மாகாணம் (66.91 வீதம்) ஆகியன முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

மூன்று பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றவர்களில் மேல் மாகாணம் அதிக எண்ணிக்கையையும் (2,328 மாணவர்கள்), அதிக சதவீதத்தையும் (4.37 வீதம்) கொண்டுள்ளது.

வடமத்திய மாகாணம் (60.91 வீதம்) பல்கலைக்கழகத் தகுதியின் அடிப்படையில் கடைசி இடத்தைப் பெற்றுள்ளதுடன், அங்கு அனைத்துப் பாடங்களிலும் தோல்வியடைந்தவர்களின் சதவீதம் (11.02 வீதம்) மற்றைய மாகாணங்களைவிட அதிகமாகக் காணப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் பாடசாலை விண்ணப்பதாரர்களில் 66.12 வீதம் பேர் பல்கலைக்கழகத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் என அனைவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து விண்ணப்பதாரர்களையும் கருதும்போது, பல்கலைக்கழகத் தகுதி பெற்றவர்களின் சதவீத அடிப்படையில் வட மாகாணம் (65.19 வீதம்) முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மேல் மாகாணம் 63.76 வீத சதவீதத்துடன் இரண்டாம் இடத்தையும், தென் மாகாணம் 63.69 வீத சதவீதத்துடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

வடமத்திய மாகாணத்தில் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியடைந்தவர்களின் சதவீதம் 12.75 வீதம் ஆகக் காணப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் ஒட்டுமொத்தமாகப் பரீட்சைக்குத் தோற்றிய 281,810 விண்ணப்பதாரர்களில் 176,527 (62.64 வீதம்) பேர் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, பாடசாலை விண்ணப்பதாரர்களில் மேல் மாகாணமும், ஒட்டுமொத்த விண்ணப்பதாரர்களில் வட மாகாணமும் பல்கலைக்கழகத் தகுதியின் அடிப்படையில் முன்னிலையில் உள்ளதை இந்தத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. (அ)

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆம் ஆண்டு; தந்தை செல்வா அரங்கில் மே 30 எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம், ஏப். 09

வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50ஆம் ஆண்டு நினைவாக மே 30ஆம் திகதி தந்தை செல்வா அரங்கில் ஒரு நினைவு எழுச்சி மாநாடு நடைபெற உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த ஊடக சந்திப்பில் ஊடக சந்திப்பில் தவத்திரு வேலன் சுவாமிகள், அருட் தந்தை அகஸ்ரின் அடிகளார், அருட் பணி ஜெகதாஸ் அடிகளார் மற்றும் க.இதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் கல்வியாளர்கள், மாணவர்கள், அரசியல் தலைவர்கள், சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் மூலம், தீர்மானத்தின் அரசியல், சட்ட மற்றும் தமிழ் இனத்தின் இறைமையின் பரிமாணங்களும் ஆராயப்படும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, தமிழ்மக்களின் அபிலாஷையை வெளிப்படுத்த பொதுமக்கள், மாணவர்கள், தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடக பிரதிநிதிகள், கொள்கை வடிவமைப்பாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 09.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org